REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

மலர் 4| சென்னை: மார்கழி 4உ செவ்வாய் (18—12—56) ★ ★ வெளியூர்: மார்கழி 5உ புதன் (19—12—56) |இதழ் 164

தேர்தல் பிரச்சாரத்திற்கு சினிமா!

காங்கிரசின் புதிய முறையாம்!

காங்கிரஸ் வெற்றி பெறுவதற்காக, தேர்தலின்போது, சினிமாப் படங்களையும் உபயோகிக்கப் போகின்றனராம் காங்கிரசார்!

பம்பாய் பிரதேச காங்கிரஸ் தலைவரான எஸ். கே. படீல் இத்தகவலை அறிவித்திருக்கிறாராம்!

அண்மையில் பண்டிதர் பம்பாய் வந்தபோது, 'இம்முறை தேர்தல் பிரச்சாரத்திற்கு என்ன புதுமுறையைக் கையாளப்

(4-ம் பக்கம் பார்க்க)

காமராசர் ஆட்சிக்கு டெல்லி தரும் மதிப்பு!

கைத்தறித் துறையில் விசைத்தறித் திணிப்பு

கைத்தறிகளுக்குத் தீங்கு விளைவிக்காதாம்

மந்திரி பக்தவத்சலம் காட்டும் விசித்திர உதாரணம்

சென்னை, டிச. 18—

கைத்தறித் துறையில் தாங்கள் கொண்டுள்ள நிலையான அக்கரையின் காரணமாகவே, விசைத்தறிகளைப் புகுத்தத் திட்டமிட்டிருப்பதாக மந்திரி பக்தவத்சலம் சட்டசபையில் கூறினாராம்!

ஆனால் டெல்லி சர்க்காரும் சென்னை சர்க்காருமாகச் சேர்ந்து விசைத் தறியைக் கைத்தறித்துறையில் புகுத்துவது, இப்போதுள்ள கைத்தறிகளுக்கு எள்ளளவு தீங்கையும் விளைவிக்காது என்றும், அப்படித் தீங்கு விளைவிக்கக்கூடிய எந்த ஒரு நடவடிக்கையையும் தாங்கள் மேற்கொள்ளப் போவதில்லையென்றும் அந்த அமைச்சர் கூறினாராம்.

ஆனால் கைத்தறித் துறையில் விசைத் தறித் திணிப்பு, பல்லாயிரக் கணக்கான நெசவாளர்களை வேலையற்றுத் திண்டாடச் செய்யும் என்று பல நெசவாளர் சங்கங்கள் தீர்மானங்கள் நிறைவேற்றியிருக்கின்றன.

தமது வாதத்திற்கு ஆதரவாக சின்னாளப்பட்டியில் 2 ஆண்டுகளுக்கு முன்பு, 2 விசைத்தறிகள் நிறுவப்பட்டன என்றும், அதனால் எந்த ஒரு கைத்தறியும் பாதிக்கப் படவில்லை என்றும் மந்திரி பக்தவத்சலனார் கூறியிருக்கிறார்.

'டில்லி சர்க்காரே, கைத்தறித் துறையில விசைத்தறியைத் திணிக்கும் தங்கள் திட்டத்தைப் புனராலோசனை செய்துவருகின்றனர் என்று கூறப்படுகிறது. அப்படியானால் சென்னை சர்க்கார் அது பற்றி கலந்தாலோசிக்கப்பட்டதா?' என்று ஒரு உறுப்பினர் கேட்ட போது, மந்திரி பக்தவத்சலம் டில்லி சர்க்கார் இதுபற்றி எவ்விதத் தகவலும் தெரிவிக்கவில்லை என்றும், சென்னை சர்க்காரைப் பொறுத்த வரையில் இந்த விவகாரம் இன்னும் ஆலோசனைக் கட்டத்திலேயே இருக்கிறது என்றும் கூறியிருக்கிறார்.

சிமெண்டு 'கோட்டாவை' அதிகரிக்க சென்னையின் கோரிக்கை

மௌனம் மூலம் மறுக்கிறது டெல்லி!

சென்னை, டிச. 17—

"சென்னை மாநிலத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள சிமெண்டு கோட்டா போதுமானது அல்ல என்பதால், அதை அதிகரிக்க வேண்டும் என்ற சென்னை சர்க்கார் கோரிக்கைக்கு இதுவரை டில்லி சர்க்காரிடமிருந்து பதில் வரவில்லை; சென்னையின் கோரிக்கையை மீண்டும் வற்புறுத்தலாம்," என்று, மந்திரி இராமநாதபுரம் இராசா சட்டசபையில் தெரிவித்திருப்பதின் மூலம் டில்லி சர்க்கார் சென்னை மாநில சர்க்காருக்குத் தருகிற மதிப்பை உணர்ந்துகொள்ள முடியும்.

சென்னைக்கு இப்போது, மக்கள் உபயோகத்திற்கென 21,683 டன்னும் சர்க்கார் உபயோகத்திற்கு 11,164 டன் சிமெண்டும் மட்டுமே ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றும், இது மக்களின் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடியதாக இல்லை என்றும், எனவே, தேவைக்கு ஒப்ப 'கோட்டா'வை அதிகரிக்க வேண்டும் என்றும் சென்னை சர்க்கார் கேட்டிருந்ததைத் தான், டில்லி சர்க்கார் தங்கள் மௌனத்தின் மூலம் இல்லையென்று தெரிவித்திருக்கின்றனர் என்றும் தெரிய வருகிறது.

சென்னையின் கோரிக்கையை டில்லி ஏற்குமா?

புதுடில்லி, டிச. 15—

1940 ஆண்டின் மருந்துச் சட்டம், தரக்குறைவான மருந்துகளை வைத்திருப்பவர்களைத் தண்டிப்பதற்கு மட்டும் இடம் தருகிறதாம்; ஆனால் அந்த மருந்துகளை பறிமுதல் செய்ய சட்டம் இடம் தரவில்லையாம்.

எனவே, மருந்துகளையும் பறிமுதல் செய்யும் வகையில், சட்டத்தின் 31-வது பிரிவு திருத்தப்பட வேண்டுமென்று மத்திய அரசாங்கத்தை சென்னை அரசாங்கம் கேட்டுக்கொண்டுள்ளதாம்.

போலி மருந்துகளைத் தயாரிக்கும் நிலையங்களை முத்திரையிடவும் மருந்துகளைக் கைப்பற்றவும் இன்ஸ்பெக்டர்களுக்கு அதிகாரம் அளிக்கும்வகையில் சட்டத்தின் 22-வது பிரிவு திருத்தப்பட வேண்டும் என்று பம்பாய் அரசாங்கம் கேட்டுக்கொண்டிருக்கிறதாம்.

56 இடங்களில் கள்ள நாணயத் தயாரிப்பாம்

சென்னை சட்டசபையில் தகவல்

சென்னை, டிச. 18—

சென்னை மாநிலத்தில் 56 இடங்களில் கள்ள நாணயம் தயாரிக்கப்பட்டதாகத் தகவல் தரப்பட்டிருக்கிறது.

இது சம்பந்தமாகக் கைது செய்யப்பட்டவர்களில் 43 பேர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டு 33 பேர் தண்டிக்கப்பட்டனரென்றும், மற்றவர்கள் விடுதலை செய்யப்பட்டனரென்றும் கூறப்பட்டிருக்கிறது.

இந்த வழக்குகள் 1954 முதல் 1956-வரை நடைபெற்றனவாம்.

மொத்தம் ரூ. 19,000 மதிப்புக்குக் கள்ள நாணயம் தயாரிக்கப்பட்டதாம்.

'தர்மகர்த்தா பொறுப்பு' முடிவடையும்

'டோகோலாந்து,' இப்போது 'தர்மகர்த்தா'வின் ஆதிக்கத்திலிருந்து வருகிறது.

இனி அது சுதந்திரம் பெறும் 'கோல்ட் கோஸ்டு'டன் இணைய வேண்டும் என்று ஐ. நா. அசெம்பிளி இன்று தீர்மானித்திருக்கிறது.

'அரை நாள் படிப்பு' என்ற சர்க்கார் கல்வித் திட்டத்திற்கு வேட்டு!

மாற்றி அமைக்கும் முயற்சிகள் குழப்பங்களையே உருவாக்கும் எனக் குறிப்பு

மாநிலம் முழுமையிலும் கட்டாயத் துவக்கக் கல்வி அமுலாக வேண்டும்

கல்விச் சீர்திருத்த 'வெள்ளை அறிக்கை' பற்றி சென்னை சட்டசபைக் குழு சிபாரிசு

சென்னை, டிச. 17—

"அரை நாள் படிப்பு' என்ற சர்க்காரின் கல்வித் திட்டத்திற்கு நாட்டில் பெரும்பான்மையான எதிர்ப்பு இருந்து வருகிறது; அந்த எதிர்ப்பு முழுவதும் அநியாயமானது என்று கூறுவதற்கில்லை.

"இத்திட்டத்தை மாற்றியமைக்க மேற்கொள்ளப்படும் எந்த ஒரு புதிய திட்டமும், விரும்பத்தகாத குழப்பங்களையே உருவாக்கும்; அத்தகைய குழப்பங்கள், சமூகத்தின் பல பிரிவினரின் ஒத்துழைப்பையும் பெற்று நிலைபெற வேண்டிய இந்த ஆரம்பக் கல்வித் திட்டத்தின் வெற்றிக்குப் பெரியதோர் ஊறு விளைவிப்பதாகவும் அமையும்"

—என்று, மாநில சர்க்காரின் கல்வி இலாகாவின், 'வெள்ளை அறிக்கை' குறித்து சட்டசபைக் குழு கருத்தறிவிக்கிறது.

குழுவின் சிபாரிசு

பள்ளிப் படிப்பின் மொத்த கால அளவு 11 வருடங்களாகத் தான் இருக்கவேண்டும் என்றும் அது 12 வருடங்களாக உயர்த்தப்படக்கூடாது என்றும், இப்போதிருக்கிற எஸ். எஸ். எல். சி வகுப்புகளுக்கான கால அளவை 3 வருடங்களிலிருந்து 4 வருடங்களாக உயர்த்தவேண்டுமென்ற சிபாரிசையும் அக்குழு ஏற்றுக்கொண்டிருக்கிறது.

ஆரம்பக் கல்வி நிலை குறித்து அக்குழு தெரிவித்துள்ள கருத்தாவது:—

'1965—66-க்குள், மாநிலம் முழுமையிலுமுள்ள நகரங்கள், கிராமங்கள் ஒவ்வொன்றிலும், 5 வருட ஆரம்பக் கல்வி கண்டிப்பாக அமுல் நடத்தப்படவேண்டும். இந்தத் திட்டத்தினால், 1965-66ல், மாநிலத்திலுள்ள ஆரம்பக் கல்வி பெற்றிருப்போரின் தொகை, இப்போது இருப்பதைவிட இருமடங்குக்கும் அதிகமாக இருக்கும்."

எல்லா சந்தர்ப்பங்களிலும் ஆரம்பப்பள்ளி மாணவர்களுக்கு இலவச உணவு வழங்கப்பட முடியாது என்பதை அக்குழு ஒப்புக்கொண்டாலுங்கூட, மாநில முழுமையிலும், ஆரம்பப்பள்ளி மாணவர்களுக்கு இலவச உணவு வழங்கும் திட்டத்தை மேலும் விரிவுபடுத்த வேண்டும் என்றும் அக்குழு ஆலோசனை கூறியிருக்கிறது.

தமிழ் நாட்டில் மேலும் இரும்புக் கனிவளம்!

கோவை மாவட்டத்தில் கிடைத்திருக்கிறதாம்!

கோவை மாவட்டம் கோபி தாலுகாவில் வாணிபுத்தூர் பிர்காவிலுள்ள அடர்ந்த காடுகளில் எடக்காஞ்சி மலைச்சாரலில் பாறைகளில் நடத்திய 'சர்வே'யின்மூலம் அங்கு ஏராளமான இரும்புச் சத்துள்ள இரும்புக் கனிகள் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாம். இந்த உலோகக் கனிவர்க்கத்தில் எவ்வளவு சதவிகிதம் இரும்பு கிடைக்குமென்பது பற்றி ஆராயப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

கோபி தாலுகாவில் இரும்புக் கனிச் சுரங்கத்துக்கான வாய்ப்பு நிறைய இருப்பதாகத் தெரிகிறதாம்.

தோட்டத் தொழிலாளருக்கான தொழில் நீதி மன்றத் தீர்ப்பு

நிறுத்திவைக்க தலைமை உயர் நீதிமன்ற முடிவு

புதுடில்லி, டிச. 17—

தோட்டத் தொழிலாளர்களுக்கும்—முதலாளிகளுக்கும் இடையே தொழிலாளரின் சம்பள உயர்வு பற்றி இருந்துவந்த தகராறினைத் தீர்த்துவைக்க நியமிக்கப்பட்ட கோவை தோட்டத் தொழிலாளர் 'டிரிபியூனல்' தந்த தீர்ப்பினை அமுல் செய்யாமல் நிறுத்திவைக்க வேண்டுமென்று முதலாளிகள், தலைமை உயர் நீதிமன்றத்தில் கோரியிருந்தனர்.

'தற்காலிகமாக, அந்தத் தீர்ப்பை நிறுத்திவைக்க வேண்டும்' என்று, தலைமை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கிறதாம்.

என்றாலும், தொழிலாளருக்கு இடைக்கால நிவாரணமாக முறையே முதல், இரண்டாம், மூன்றாம் பிரிவினருக்கு தினக்கூலி 3 அணு, 2 அணு, ஒரு அணு அதிகமாகத் தரவேண்டும் என்றும் மேலும் இரண்டு 'போனசு'களும் தரப்பட வேண்டும் என்றும் தலைமை உயர் நீதிமன்றம்

(தொடர்ச்சி 1-ம் கலம் பார்க்க)

(5ம் கலத்தின் தொடர்ச்சி)

தீர்ப்பளித்திருக்கிறதாம்.

தோட்டத் தொழிலாளருக்கான தொழில் கோர்ட்டு, 1952 மார்ச் 24-ந் தேதி முதல் சென்னை மாநிலத்தில் உள்ள 228 காப்பி, தேயிலை, இரப்பர் தோட்டங்களில் வேலை செய்வோருக்கு சம்பள உயர்வு தரவேண்டும் என்று தீர்ப்பு வழங்கியிருந்தது.

இந்தத் தீர்ப்புப்படி தாங்கள் ரூ. 17 கோடி வரை தரவேண்டியிருக்கும் என்றும், தங்கள் கணக்குப்படி தாங்கள் தரவேண்டியது ரூ. 7,84,00,000 மட்டுமே என்றும் முதலாளிகள் கூறுகின்றனராம்.

மேலும், இப்போது வழங்கப்பட்டுள்ள தீர்ப்புப்படி ஆண்டுதோறும் ரூ. 4,47,00,000 வரை தாங்கள் செலவிட வேண்டி வரும் என்றும், தங்கள் கணக்குப்படி ரூ. 1,68,00,000-க்கு மேல் செலவு வராது என்றும் கூறுகின்றனராம்.

சென்னை சர்க்கார் நியமித்த தனித் தொழில் கோர்ட்டு, 228-தோட்டங்களைச் சேர்ந்த ஒரு லட்சம் தொழிலாளருக்கு நியாயம் வழங்கியிருந்தது.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 18-12-'56 செவ்வாய்

'சாபக்கேடு'!

'சம்பள உயர்வு வேண்டும்; கிராக்கிப் படி, விலைவாசி ஏற்றத்திற்கு ஒப்ப உயர்த்தப்படவேண்டும்.'

'தொழிலாளருக்கான பாதுகாப்புச் சட்டங்கள் வேண்டும்; அவை சரிவர அமுலாகுமாறு கண்காணிக்கவேண்டும்.'

'கல்வி வசதிகள் வேண்டும்; திட்டங்களில் தேவையான மாற்றங்கள் வேண்டும்.'

'வீட்டு வசதி வேண்டும்; வீடின்றித் தவிக்கும் இழிநிலை மாறவேண்டும்.'

'விவசாயிகளுக்கு வாழ்வளிக்க நிலச் சீர்திருத்தச் சட்டம் வேண்டும்; நிலம் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்; கூட்டுறவு முறையில் விவசாயம் பேணி வளர்க்கப்படவேண்டும்.'

'விஷம்போல் ஏறிவரும் உணவுபோன்ற அத்தியாவசியப் பொருள்களின் விலையைக் கட்டுப்படுத்தி மட்டுப்படுத்தவேண்டும்.'

'தொழில்களை நிறுவவேண்டும்; இயற்கை வளங்களைப் பயன்படுத்தவேண்டும்; வேலையின்மையைத் துரத்தவேண்டும்.'

'மொழிவழியாக மாநிலங்கள் அமைதல் வேண்டும்; மாநிலங்களில் தாய்மொழி ஆட்சிமொழியாக வேண்டும்.'

'இந்தி திணிக்கப்படக் கூடாது; இந்தியாவின் பொதுமொழியாக இந்தி அமைதல் கூடாது; ஆங்கிலமே இருக்க வேண்டும்.'

'பெண்களுக்கு ஆண்களைப் போல சம உரிமைகள் வேண்டும்; அவர்களின் முன்னேற்றத்திற்குத் தனிக் கவனம் செலுத்தப்படவேண்டும்.'

'சமுதாயத்தில், பின்தள்ளப்பட்டவர்கள் — தாழ்த்தப்பட்டவர்கள் ஆகியோரும் இதரர்களைப்போலவே சம வாய்ப்புகளும் பெற்று முன்னேற வசதிகள், விசேடச் சலுகைகள் வேண்டும்.'

இப்படி, மக்கள் தாங்கள் பெற்றுள்ள விழிப்புணர்வுக்கு ஏற்பவும், தங்களை நிர்ப்பந்திக்கும் தேவைகளுக்கு ஒப்பவும், அவசியம் கருதி, அவ்வப்போது ஆங்காங்கே கோரிக்கைகளை எழுப்புகிறபோதெல்லாம், டில்லியிலும் இதர மாநிலங்களிலும் உள்ள காங்கிரஸ் ஆளவந்தார்கள் மேற்கொள்ளுகிற போக்கு இரண்டு மூன்று வகையானதாகும்.

ஒன்று, கோரிக்கைகள் எழும்போது, சில காலத்திற்கு அவை குறித்துக் கேளாதவர் போலவே அலட்சியம் காட்டும் போக்கு!

பின்னர், அந்த அலட்சியத்தை, கோரிக்கை எழுப்பும் மக்கள் தங்களின் சக்திகளை ஒன்று திரட்டித் திரண்டெழுந்து ஆர்ப்பாட்டங்கள், கிளர்ச்சிகள் மூலம் தகர்த்தெறிய முற்படும்போது, அடக்குமுறைகளை ஏவும் போக்கு!

மூன்றுவது, அந்த அடக்குமுறைகளையும் தாங்கிக்கொண்டு, கஷ்ட நஷ்டங்கள் பலவற்றை மனமுவந்து ஏற்றுக்கொண்டு, மக்கள் மேலும், கிளர்ச்சிகளைத் தொடர்ந்து தீவிரமாக்கும்போது, 'கோரிக்கைபற்றிக் கவனிக்க விசாரணைக் குழு ஒன்றை நியமிக்கிறோம்' என்று கூறும் போக்காகும்!

வீண் காலதாமதத்திற்காகவும், தாங்கள் விரும்பும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கு 'விசாரணைக் குழுவின் சிபாரிசு,' என்ற ஆதாரத்தைப் பெறுவதற்காகவுமே பொதுவாகப் பெரும்பாலும் காங்கிரசார், விசாரணைக் குழுக்களை அமைக்கிறார்கள் என்று கூறினால், அது முழுவதும் தவறுடையதல்ல!

கோரிக்கைகளைத் தட்டிக்கழிக்கவும், அல்லது அவை தட்டிக் கழிக்க முடியாதனவாயிருந்தால் பெயரளவுக்குக்கோரிக்கைகளை ஏற்கின்ற 'கண்துடைப்பு' வேலை செய்யவுமே காங்கிரஸ் ஆளவந்தார்கள் விசாரணைக் குழுக்களை நியமிக்கிறார்கள் என்று கூறிடுவதற்கு கடந்த ஒன்பதாண்டுக் கால ஆட்சியிலிருந்து எண்ணற்ற சான்றுகளை எவரும் எளிதில் காட்டமுடியும்.

'நிபுணர்களை நியமிக்கிறோம்—விசாரணை செய்ய,' என்று கூறிவிட்டு, அந்த நிபுணர்களுக்கு தங்களின் நிறைவேற்றப்படவேண்டிய விருப்பத்தை கோடிட்டுத் தொட்டுக்காட்டும் 'பெரிய மனிதர்'கள் குழுக்களை நியமிக்கும் பெரும் பொறுப்பில் இருக்கிறார்கள் என்பதால், பொதுவாகவே 'நிபுணர் விசாரணைக் குழு' என்றாலே மக்களுக்கு அவநம்பிக்கை ஏற்படும் நிலை—நிபுணர் குழுவின் விசுவாசத்தைச் சந்தேகிக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

குறிப்பிட்ட ஒரு தகராறுக்குரிய விவகாரத்தை ஆராய்ந்து, கருத்துக்களை அறிவிப்பதற்கென நியமிக்கப்படுபவர்கள், குறைந்தபட்சம் அந்த விவகாரத்தில் ஆராய்ந்து தெளிந்த அறிவும அனுபவமும் உடையவராயில்லாவிட்டாலும் பரிச்சயமுடையவராகவாவது இருக்கவேண்டும். விவகாரம் பற்றி ஏதுமே தெரியாதவர்கள் தகராறைத் தீர்த்துவைக்கும் ஆலோசனைகூற நியமிக்கப்படுவது என்றால், அந்தச் செயலை, 'சிறிதுகூடத் தரம் குறையாத ஏமாற்று வித்தை,' என்றுதான் கூறவேண்டும்.

நவீனகால (மேலை நாட்டு) மருத்துவ முறையையும், தொன்றுதொட்ட — ஆனால் முறையான வளர்ச்சியடையாத சித்தம், ஆயுர்வேதம், யுனானிபோன்ற இந்திய வைத்திய முறைகளையும் ஒன்றாக இணைத்து, மாணவர்களுக்குப் பாடமாகப் போதித்து பயிற்சி தந்து, பட்டம் வழங்கி வைத்தியர்களாக உலவவிடுவது நல்லதா கெட்டதா என்ற விவகாரத்தில் தகராறு எழுந்தது.

டில்லிப் பேரரசு, உடனே, மக்கள்சபையில் எழுந்த நிர்ப்பந்தம் காரணமாக ஒரு குழுவை நியமித்தது; அந்தக் குழுவில் இடம் பெற்றவர்கள் ஏழு மந்திரிகள்! பெயர் தெரியவில்லை. ஆனால் அவர்கள் எவருக்கும், இந்த பல வைத்திய முறைகள் அத்தனையிலும் கூட அல்ல — ஒன்றில்கூட எந்தவகை ஞானமும் கிடையாது!

இந்த மந்திரிகள்தான் தகராறுக்குள்ளான விவகாரத்தை ஆராய்ந்து, நல்லதா கெட்டதா என்று தீர்ப்புக்கூற வேண்டும்.

டில்லிப் பெரியவர்கள் நியமிக்கும் குழுவின் இலட்சணம் எப்படியிருக்கிறது பார்த்தீர்களா? இதனை முதல்தரமான ஏமாற்று வித்தை என்று சொல்லலாம். ஆனால், இந்தப் போக்கினைக் கண்டித்துக் குரல் கொடுத்துள்ள டாக்டர் ஏ. இலட்சுமணசாமி அவர்கள் 'சாபக்கேடு' என்று கூறியிருக்கிறார்.

காங்கிரஸ் ஆளவந்தார்களின் குழு நியமிக்கும் போக்கு, அந்தத் துறைகளில் அறிவும ஆராய்ச்சியும் அனுபவமும பெற்றவர்களைக் கேலி செய்வதாகும — புண்படுத்துவதாகும் என்பதுடன், மக்களை வஞ்சிப்பதுமாகும்.

இந்தப் புண்படுத்தும் வஞ்சிக்கும போக்கில் கைதேர்நதவர்களாயிற்றே காங்கிரஸ் ஆளவந்தார்கள் — அதிலும குறிப்பாக, டில்லிப் பெரியவர்கள்! இந்தப் போக்கினை எத்தனை நாளைக்குத்தான் மக்கள் மன்றம அனுமதிக்கப் போகிறதோ?

காதர் ரஷ்யாவின் 'கைப்பொம்மை' ஆக்கப்பட்ட வரலாறு!

ரஷ்ய இராணுவத்தை எதிர்த்தவர் இருநாளில் எப்படி மாற்றப்பட்டார்?

ஹங்கேரி முன்னாள் மந்திரி தரும் விளக்கம்

'ஐ.நா., தீர்மானம் நிறைவேற்றினால் மட்டும் போதாது—படை அனுப்ப வேண்டும்' என்கிறார் அவர்!

லண்டன், டிச. 16—

மந்திரி சபை அமைப்பதற்கு இரண்டு நாளைக்கு முன்பாக, காதர், ரஷ்ய இராணுவத் தளபதியும் இருந்த மந்திரி சபைக் கூட்டம் ஒன்றில் பேசும்போது, 'ரஷ்ய டாங்கிகளுக்கு எதிராக, நான் வெறுங்கையுடன்கூடப் போராடுவேன்' என்று கூறியிருக்கிறார்.

"இரண்டு நாளைக்குப் பிறகு அவர் சர்க்கார் அமைத்தபோது—அப்படிக் கூறிய ஒருவர் இப்படி மாற்றப்படுவதற்கு, எத்தகைய பலாத்காரம் உபயோகிக்கப்பட்டிருக்கும் என்பது நமக்குத் தெரிந்ததேயாகும்,"

என்று, இம்ரி நாகி சர்க்காரில் ஒரு மந்திரியாக இருந்த ஹங்கேரியின் சோஷலிஸ்டு தலைவர்களுள் ஒருவரான அன்னா கெத்லி என்ற பெண்மணி இங்கு கூறியிருக்கிறார்.

அவர் இப்போது பிரிட்டிஷ் தொழிற் கட்சியின் விருந்தினராக இருக்கிறார். சில தினங்களில் நியூயார்க் செல்லவிருக்கும் அவர், பத்திரிகையாளரிடம் மேலும் கூறியதாவது:—

"நான் ஐ நா. சபையிடம், ஹங்கேரிக்கு சர்வதேசப் போலீஸ் படை அனுப்புமாறு கோரப் போகிறேன். எகிப்தில் நடந்துகொண்டதுபோன்றே ஐ. நா. ஹங்கேரியிலும் நடந்துகொள்ள வேண்டும் என்று வற்புறுத்தப் போகிறேன்.

"இதனை நானே ஐ நா. முன் தோன்றிக் கூறப்போகிறேன்.

"ஹங்கேரியில் மக்கள் சுதந்திரமாக நடமாடுகிற உரிமையையும், நாகியின் ஒரே தகுதிவாய்ந்த சர்க்கார் சுதந்திரமாகச் செயல்படும் உரிமையையும் ஐ நா. படை பெற்றுத்தரவேண்டும்.

"அப்படிக் கூறமுடியுமா?—என்று பலர் கேட்கக்கூடும்; ஆனால் கொரிய யுத்தம் பற்றி விவரிக்க செஞ்சீனக் கம்யூனிஸ்டுப் பிரதிநிதி ஒருவர் ஐ நா சபையில் பேசுவதற்கு, முன்பொருமுறை அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

"ஹங்கேரியும் ரஷ்யாவும், ஐ நா-வின் பெரும்பான்மை தீர்மானங்களை ஏற்க மறுத்தால் ஐ. நா. நீடிப்பதற்கான உரிமைகள் குறைகிவிடும்."

'முழு அளவில் தடை செய்யவேண்டும்'

'டில்லிப் பேரரசு தவறான போக்கை கடைபிடிக்கிறது'

புதுடில்லி, டிச. 16—

இந்தியாவுக்குத் தேவையான சமையலுக்கு உபயோகமாகும் தட்டுமுட்டுச் சாமான்கள், குளிர் சாதனங்கள் ஆகியவற்றை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதை முழு அளவில் தடை செய்ய வேண்டுமென்று, பார்சிலனைக்குப் பின்னர், அரசாங்கத்திற்குக் குழு ஒன்று சிபாரிசு செய்துள்ளதாகத் தெரிகிறது.

இந்தியாவில் தயாரிக்கப்படும் தட்டுமுட்டுச் சாமான்களின் 'தரம்' குறைவாக மதிப்பிடப்பட்டிருக்கிறது—சுலபமாக உடைந்துவிடுகிறது; ஒன்றைப்போல மற்றொன்று இருப்பதில்லை—என்று கருதப்படுவதைக் கண்டித்து 'அதிகப்படியான தேவைக்கு ஆர்

(4-ம் கலம் பார்க்க)

(3-ம் கலத்தின் தொடர்ச்சி)

டர் கொடுத்தால் நிச்சயமாக இந்தக் குறைகளை அகற்ற முடியும்,' என்று குழு தெரிவித்துள்ளது.

இதுபோன்ற சாமான்களை பெரிய சிற்றுண்டி விடுதிகள் தங்கள் தேவைக்கு 75 சதவிகிதமும், மற்ற சாதாரண சிற்றுண்டி விடுதிகள் 50 சதவிகிதமும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்து கொள்ளுவதற்குத் தற்போது அனுமதிக்கப்பட்டுள்ளனவாம்.

'இந்தியத் தொழில்களைப் பாதுகாத்து முன்னேற்றமடையச் செய்வதே இந்தியப் பேரரசின் கடமையாக உள்ளபோது, தட்டுமுட்டுச் சாமான்கள் இறக்குமதிப் பிரச்சினையில இந்திய அரசாங்கம் ஒரு தவறான போக்கைக் கடைப்பிடிப்பதுகூடாது,' என்றும அந்தக்குழு தன அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறதாம.

பெரும் மாளிகையில் வசிப்போர்!

மாநிலங்கள் சபையில் உறுப்பினர்கள் விவாதம்

புதுடில்லி, டிச 15—

மாநிலங்கள் சபையில், பெரும் மாளிகைகளில் வசிப்போர் பற்றி குசிகரமான விவாதம் ஒன்று நடைபெற்றிருக்கிறது

சந்துலால் பரீக் என்ற உறுப்பினர் நிதி மசோதாக்கள்பற்றிப் பேசகையில், 'ஒருவர் வாழுகின்ற இடத்தின் (வீடு) அளவு நிர்ணயிக்கப்பட வேண்டும்; அந்த அளவை விட அதிகமான இடத்தில், பெரிய பங்களாக்களில் வசிப்போர்மீது வரி விதிக்க வேண்டும்' என்று கூறியிருக்கிறார்.

அக்பர் அலிகான் என்ற உறுப்பினர், 'மந்திரிகள் வசிக்கும் பங்களாக்கள்கூடவா?' என்று கேட்டிருக்கிறார்.

உடனே பரீக், 'மந்திரிகள் வசிக்கும் வீடுகளின் அளவு நிர்ணயிக்கப்படவேண்டும்' என்று கூறியிருக்கிறார்.

எம் சி ஷா என்ற மந்திரி 'இந்த உறுப்பினர், பங்களாக்களில் வாழ்வோரபற்றிப் பொறாமைப்படுகிறார்' என்று கூறியிருக்கிறார்.

அகதி மந்திரி மேகாசந்த் கன்னா எழுந்து, 'பரீக், பம்பாய் கடற்கரையில ஒரு பெரிய இல்லத்தில் வாழுகின்றார்' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

பரீக் எழுந்து, 'நான் வசிக்கும் வீடு, மந்திரி கன்னாவின் கல்கத்தாவில் உள்ள வீட்டைவிடச் சிறியது தான்' என்று குறிப்பிட்டாராம்!

பீடித் தொழிலிலுள்ள சிறுவர்கள் நிலைமை

பரிசீலனையில் சில தகவல்கள்

மாநில சர்க்கார்கள் நடத்தியதோர் பரிசீலனையிலிருந்து பீடித் தொழிலில் சிறுவர்கள் அமர்த்தப்படுவதும், அவர்களுடைய உடல் நலம் கெடுவதும் புலனாகியுள்ளதாம்.

பீடித் தொழிற்சாலைகள் பெரும்பாலும் குறைந்த வாடகையுள்ள—வசதியில்லாத கட்டிடங்களில் நடத்தப்படுவதால் சில ஆண்டுகள் பணியாற்றும் சிறுவர்களின் உடல் நலம் பாதிக்கப்பட்டுவிடுகிறது

உணவுக் குறைவால் அச்சிறுவர்களில் பெரும்பாலோர் சொறி, சிரங்கு, வாய்ப்புண் போன்ற நோய்களாலும் பாதிக்கப்படுகின்றனர்.

மைசூர் சர்க்கார் ஊழியர்களுக்கு சம்பள உயர்வு

தேர்தல் நெருங்கும்போது தாராளம் காட்டும் போக்கு!

மைசூர், டிச. 16—

சுமார் 4 கோடி ரூபாய்வரை ஆண்டுதோறும் அதிகமாகச் செலவிட்டு, குறைவான ஊதியம் பெறும் சர்க்கார் ஊழியரின் சம்பளத்தை உயர்த்த மைசூர் மாநில சர்க்கார் முடிவு செய்திருக்கிறதாம்.

மைசூர் பிரதேச காங்கிரஸ் அரசியல் மாநாட்டில் பேசும்போது, முதன் மந்திரி எஸ். நிஜலிங்கப்பா இந்தத் தகவலைத் தந்திருக்கிறார்.

இதனை அவர் அறிவித்தபோது கூடியிருந்தோர் பெரும் ஆரவாரம் செய்தனராம்!

11,50,00,000 ரூபாய் செலவில்!

மூன்று அமெரிக்க விமானங்களை வாங்குவதற்கு இந்தியா திட்டம்

'ஏர் இந்தியா இண்டர்நேஷனல்' விமானப் போக்குவரத்து நிறுவனத்திற்காக, அமெரிக்காவில் தயாரான மூன்று பிரயாணிகள் விமானங்களை வாங்குவதற்கு உலக பாங்கியிடம் இந்தியா உதவி கேட்டிருக்கிறதாம்!

'போயிங்' என்றழைக்கப்படும் இந்த விமானங்கள் மூன்றுக்கும் ரூ 11,50,00,000 விலையாம்!

அல்லல் பலவற்றிற்கு நம்மை ஆளாக்கிய காங்கிரஸ் சர்க்கார்!

தொடர்ந்து பதவியிலிருக்க வேண்டுமா?

வடநாட்டுத் தொழிலாளர் வருமானம் என்ன? தென்னுட்டுத் தொழிலாளர் வருமானம் என்ன?

குட்டக்குட்டக் குனியும் இழிநிலை திராவிடத்திற்கு ஏன்?

புள்ளி விவரம் காட்டிக் கேட்கிருர் கருணுநிதி

"கடந்த 9 ஆண்டுகளாக நாம் எத்தனை எத்தனை தீங்குகளை, சகிக்க முடியாத வேதனைகளைத் தாங்கியிருக்கிறேம்! 1956-வது மைல் கல்லில் நின்று கொண்டிருக்கும் நாம், 1947, 48-வது மைல் கற்களைச் சிறிது நேரம் திரும்பிப் பார்த்தால், அங்கே விழ்ந்துகிடக்கும் பிணங்கள் எத்தனை எத்தனை? இவைகளுக்கிடையே நடைபெற்றத் துப்பாக்கிப் பிரயோகங்கள் எத்தனை எத்தனை? பட்டினியால், பசிக்கொடுமையால் தாளாமல் உயிர் நீத்தக் குடும்பங்கள் எத்தனை? இந்த 9 ஆண்டுக் காலத்திற்குள்தான், நாட்டில் அரிசிப் பஞ்சம் ஏற்பட்டபோது 'அரிசி இல்லையா—கோதுமையைச் சாப்பிடுங்கள்; கோதுமை இல்லையா—பிண்ணுக்கு இருக்கிறதே' என்று கூறின உணவு மந்திரி முன்ஷி இருந்தார்! இந்த 9 ஆண்டுகளில் தாங்கொணு துயரங்களுக்காளாகி, மனைவி மக்களையும் பச்சைச் சிசுக்களையும் அனுதைகளாக்கிவிட்டுத் தவக்கோலம் பூண்டவர்களும், தங்களுயிரை மாய்த்துக் கொண்டவர்களும் எத்தனை பேர்? தகப்பனைப் பிரிந்து வாடின குழந்தையைக் காப்பாற்றமுடியாமல் 4, 5, ரூபாய்களுக்கு அக்குழந்தையை விற்றுவிட்டு, பிறகு தன்னையும் பிறருக்கு விற்றுக்கொண்ட கற்புக்கரசிகள் எத்தனை பேர்? பல நெசவாளர்களின் கண்களிலே கண்ணீர் வெள்ளமெனத் தேங்கியிருந்ததே—இதையெல்லாம் யாரால் மறுக்கமுடியும்? இப்படியெல்லாம் நாட்டு மக்களை அல்லலுக்கு ஆளாக்கின இந்த சர்க்கார் மீண்டும் இந்த நாட்டில் தொடர்ந்து பதவியிலிருக்கவேண்டுமா?

"பம்பாய் மாகாணத்தில் சம்பாதிப்பவர்கள் 100-க்கு 43-பேர்; அவர்களை நம்பி வாழ்வோர் 100-க்கு 57-பேர்; மத்திய மாகாணத்தில் சம்பாதிப்பவர்கள் 100-க்கு 49-பேர்; அவர்களை நம்பி வாழ்வோர் 100-க்கு 51-பேர்; ஆனுல் நமது மாகாணத்திலோ, சம்பாதிப்பவர்கள 100-க்கு 37-பேர்; இவர்களை நம்பி 100-க்கு 63-பேர் வாழவேண்டியவர்களாக இருக்கின்றனர். மற்ற மாகாணங்களில இல்லாத அளவிற்கு நாம் மட்டும் ஏன இந்த வேலையிலலாத்திண்டாட்ட நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறேம? வடநாட்டுத் தொழிலாளர் குடும்பம் ஒன்றின் சராசரி வருட வருமானம் ரூ. 293 ஆக இருக்கும்போது, நமது நாட்டில் மட்டும் ரூ. 93-ஆக இருப்பானேன்? அந்த அளவிற்கு நமது நாட்டிலே தொழில் திட்டங்கள இல்லை. நாம, வரிகளைக் கொட்டிக் கொட்டிக் கொடுத்து வாடுகிறேம். அவர்கள் குட்டக் குட்டக் குனிந்துகொடுக்கிறேம். இந்த நிலை எத்தனை நாளைக்கு என்றுதான் தி. மு. கழகம் மக்களிடம் கேட்கிறது? இந்த இழிநிலை மாற வடநாட்டிலிருந்து திராவிடம் பிரிந்தாக வேண்டுமெனபதற்காகத் தி. மு. கழகம் தேர்தலில் ஈடுபடப்போகிறது. தி. மு. கழகத்தின் இந்த இலட்சியத்திற்கு ஆதரவளிப்பது திராவிடப் பெருங்குடி மக்களின் கடமையாகும்,"

என்று தோழர் மு. கருணநிதி அவர்கள், 15-12-56 மாலை சென்னை மயிலை கபாலி டாககீஸ் எதிரிலுள்ள திடலில் நடைபெற்ற 50-வது வட்ட தி. மு. கழக 2-வது ஆண்டுவிழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசியதாவது:—

"இதனுல்தான் கடந்த காலத்தில் எததனை எத்தனையோ காரணங்களால் மக்களைச் சந்தித்த தி மு. கழகம் இப்போது பொதுத் தேரதலில் அவர்களுடைய தீர்ப்பு என்ன என்று கேடகிறது.

"'இப்போதென்ன — நிர்வாகம் சரியாக நடைபெறவா இல்லை?' என்று காங்கிரசார் நம்மைப் பார்த்துக் கேட்கலாம்; ஆனுல், அதற்கான ஆதாரங்களை—கடந்த 7, 8 ஆண்டுகளில் இந்த சர்க்காரில் ஏற்பட்ட ஊழல்களை நாம் எடுத்துக் காட்டி வந்திருக்கிறேம்.

"எத்தனையோ எச்சரிக்கைகள் இருந்தும்கூட அண்மையில் அரியலூரில் பெரியதோர் இரயில் விபத்து நடைபெற்றதே—என்ன காரணம்? ஆட்சிப் பொறுப்பில் அக்கரை—'மக்களின் உயிர் நமது பொறுப்பில் இருக்கிறது' என்ற அக்கரை இலலாத காரணம் தானே? அப்படி அக்கரை இல்லாத இந்த சாக்காரின் நிர்வாக இயந்திரததிலே ஓட்டை இலலை என்று கூறமுடியுமா?

"இரயில் விபத்திலே 150 பேர் செத்தார்கள் என்றறிந்தும் கூட நேரு பண்டிதர் இங்கு வந்தாரா? இங்குள்ள மக்களுக்கு ஆறுதலாக ஒரு சொட்டுக் கண்ணீர் வடித்தாரா? ஆனுல், வருகிற பிப்ரவரியிலே இங்கு வரப்போகிருராம் — 'மகா ஜனங்களே ....காங்கிரசுக்குத் தேர்தலிலே ஓட்டுப் போடுங்கள்' என்று தேர்தல் பிரச்சாரம் செய்ய!

"மராட்டியத்தில் அண்மையில் 2,500 ரவுண்டுகள் சுட்டிருக்கிருர்கள் மக்களைப் பார்த்து! வெளிநாடுகளில் சமாதானம பேசித் திரியும் அதே நேரத்தில் இங்கு, எங்கு பார்த்தாலும் எப்போதும போர்ப் புகைச்சலும் கலவரங்களும் தானே தாண்டவமாடுகின்றன?

"இந்த சர்க்காரின் நிர்வாக இயந்திரத்திலே ஓட்டை இருக்கிறது என்பதை நாம்கூடக் கூற வேண்டாம். சட்டசபையில் சில காங்கிரஸ் உறுப்பினர்களே தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கின்றனர். 'தேரதல் காலத்தில் சர்க்கார் அதிகாரிகளிடையே இலஞ்சப் பழக்கம் அதிகமாக ஏற்பட்டிருக்கிறது' என்று அருப்புக்கோட்டையைச் சேர்ந்த காங்கிரஸ் சட்டசபை உறுப்பினரான செயராம செட்டியார், மற்றும நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த காங்கிரஸ் எம் எல். ஏ-யான பி. செல்லத்துரை என்பவரும கூறியிருக்கின்றனர். இவ்வாறு கூறின அந்த எம. எல். ஏ.-க்கள் மேலும், 'இங்கு வீற்றிருக்கிற சில மந்திரிகளிடம்கூட அந்த இலஞ்சப் பழக்கம் இருப்பது குறித்து எனது மனம் பதறுகிறது' என்றனர். 'ஏன் பதறுது?' —என்று நாம் அவர்களைக் கேட்கிறேம். காங்கிரஸ் உறுப்பினர்களே கூறும் அளவிற்கு இந்த சர்க்காரின் நிர்வாகம் ஓட்டையாகத்தானே இருக்கிறது?

"இவற்றையெல்லாம் நீக்கத்தான் திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலிலே போட்டிபோட இருக்கிறது. தி. மு. கழகம் போட்டியிட பொதுமக்கள்தான் அனுமதித்தார்கள் என்றுலும், நம்மைத் தேர்தலுக்கு அழைத்தவர் காமராசர்தான்! கடந்த 4, 5-ஆண்டுகளுக்கு முன்னுல் நம்மைப் பற்றிப் பேசும்போதெல்லாம், காமராசர், 'இவர்கள் தேர்தலில் நின்று வெற்றி பெற்று சட்டசபைக்கு வரட்டுமே' என்று அறைகூவல் விட்டழைத்தார்; சவடால் கட்டினுர். இப்போது நாம் தேர்தலில் ஈடுபடுவது என்று முடிவு செய்ததும், போகிற இடமெல்லாம் நம் மீது காய்கிருர். ஏன் இந்த நிலை?

"தட்டிக் கேட்க ஆளில்லாமல் இதுவரை இருந்தோம்; தி. மு. கழகத்தார் வந்துவிட்டால், எதையும் ஏன் என்று கேட்பார்களே— என்ற அச்சம் அவரைப் பிடித்தாட்டுகிறது; எனவேதான், போகிற இடமெல்லாம், 'அவர்களுக்கு ஓட்டுப் போடவேண்டாம்' என்று கூறித் திரிகிருர் காமராசர்.

"அந்த அச்சத்தின் காரணமாகத்தான், ஒரு மாவட்டத்தை மட்டுமே பொறுதத வன்னியகுல க்ஷத்திரிய சங்கத்திற்கும், காமன்வீல் கட்சிக்கும் தனித்தேர்தல் சின்னங்கள் கொடுத்த இந்த சர்க்கார், இந்த மாபெரும் இயக்கத்திற்கு தனித் தேர்தல் சின்னம் தரமுடியாது என்கிருர். இவைகளினுலெல்லாம் திராவிட முன்னேற்றக் கழகம் அதன் இலட்சியங்களிலிருந்தும் கொள்கைகளிலிருந்தும் நிச்சயம் பின்வாங்கிவிடாது. தி. மு. கழகம் தேர்தலுக்காக மட்டும் —ரூ. 150 சம்பளத்திற்காக மட்டுமே தோன்றின கட்சி அல்ல."

★

நிகழ்ச்சிகள்

15—12—56 மாலை 6 மணியளவில் சென்னை 50-வது வட்டத் தி. மு கழக 2-வது ஆண்டு விழா, சென்னை - மயிலை கபாலி டாக்கீஸ் எதிரிலுள்ள மைதானத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

கூட்டத்திற்குத் தோழர் இரத்தினவேலு முன்மொழிய, தோழர் டா லு வழிமொழிய தோழர் இராம. வெள்ளையன் தலைமை வகித்தார்.

தலைவர் தமது உரையில், கழகக் கொள்கைகளை விவரித்தும், தென்னுட்டை வடவர் சுரண்டும் கொடுமைகளைப் புள்ளிவிவரங்களுடன் எடுத்துக் காட்டியும் சொற்பொழிவாற்றினுர்.

அடுததுத் தோழியர் சற்குணு சிறிதுநேரம் பேசினுர். வருகிற பொதுத் தேர்தலில கழக வெற்றிககுப் பாடுபடத் தாய்மார்களைக் கேட்டுகொண்டார்.

பின்னர் தோழர் கோ. இளவரசு அவர்கள் தி. மு. கழகம் அரசியல், சமுதாய, பொருளாதார துறைகளில எந்தெந்த வகையில் பணியாற்றி வருகிறது என்பதை எடுததுக் காட்டியும், வெளிநாடுகளில் வாழும் திராவிட மக்களின் இன்னல்களையும், அவர்கள் அத்தகு இன்னல்களுக்கு ஆளாகாமல் வாழத் திராவிட நாடு திராவிடருக்காக வேண்டிய அவசியத்தையும் விளக்கிச் சிறிதுநேரம் பேசினுர்.

பின்னர் தோழர் மு கருணநிதி அவர்கள் தி. மு. கழகம் தேரதலில் ஈடுபடுவதின் நோக்கம் குறித்தும், இந்திய சர்க்காரின் ஊழல்களை ஆதாரங்களுடன் எடுத்துக் கூறியும், பொதுத் தேர்தலில் கழகத்திற்கு ஆதரவு தருமாறு கேட்டுக்கொண்டும் நீண்டநேரம் சொற்பொழிவாற்றினுர்

அடுத்துத் தோழர் டி. வி. நாராயணசாமி சிறிதுநேரம் பேசினபின், தோழர் எஸ்.எஸ். இராசேந்திரன், தி. மு. கழகத்தைத் தூற்றித் திரியும் மாற்றுக் கட்சியினரின் போக்கைக் கண்டித்துச் சிறிது நேரம் பேசினுர்.

இறுதியில், கிளைக் கழகச் செயலாளர் தோழர் இரத்தினவேலு நன்றி கூறக் கூட்டம் இரவு $8\frac{1}{2}$-மணியளவில் இனிது முடிவுற்றது.

பொதுக்கூட்ட மேடை, கழகக் கொடிகளாலும் தோரணங்களாலும் அழகுற அலங்கரிக்கப்பட்டிருந்தது.

மேடையின்மேல், மின்விளக்குகள்மூலம் தி. மு கழகத் தேர்தல் சின்னமான 'உதய சூரியன்' அமைக்கப்பட்டிருந்தது.

கூட்டத்தில் ஏராளமான தாய்மார்கள் உட்பட ஆயிரக்கணக்கான பொதுமக்கள் திரண்டிருந்து கருத்து விளக்கம் கேட்டுச் சென்றனர்.

(ச. - தி.)

திருப்பூர் ஆலைத் தொழிலாளருக்கு:

★

'தி. மு. கழகத் தேர்தல் நிதிக்காக திருப்பூர் தனலட்சுமி, ஆசர், எஸ். ஆர். சி., தொழிலாளர்கள் சார்பில் வசூல் செய்ய ஆங்காங்கே தோழர்களிடம் இரசீதுப் புத்தகங்கள் கொடுக்கப் பட்டுள்ளன. அந்தத் தோழர்களிடம் நன்கொடை கொடுத்து இரசீதுப் பெற்றுக்கொள்ளுமாறு தோழர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கிறேன். நன்கொடை வசூலிக்கும் தோழர்கள் தங்களாலியன்றவரை விரைவில் நிதி திரட்டுமாறும், சேர்த்த நிதியை 22-12-56 மாலை 4 மணிக்கு டிராவலர்ஸ் பங்களாவில் நடைபெறும் நிதிக் குழுக் கூட்டத்தில் சேர்ப்பிக்குமாறும் கேட்டுக்கொள்கிறேன்" என்று திருப்பூர் ஆலைத் தொழிலாளர் தி. மு. கழகத் தேர்தல் நிதிக் குழுச் செயலாளர் என். பால்ராசு அறிவிக்கிருர்.

வேலை இழப்போருக்கு நஷ்ட ஈடு

அவசரச்சட்டம் இயற்றுமாறு சர்க்காருக்குக் கோரிக்கை

"'தொழிற்சாலைகள் மூடப்படுமானுல் வேலை இழக்கும் தொழிலாளர்களுக்கு நஷ்ட ஈடு கிடையாது' என்று இந்திய உயர் நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பினுல் ஏற்பட்டுள்ள விளைவுகளை நீக்குவதற்கு, தக்க சட்டமியற்ற வேண்டும்; அல்லது உடனடியாக அவசரச் சட்டம் இயற்றவேண்டும்" என்று கோரி, இ. தே. தொ. ச. கா. நிர்வாகக் குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

"இந்தத் தீர்ப்பு தொழில்துறையில் நிலவும் அமைதியைச் சீகுலையச் செய்துவிடும்; காரணமின்றியே பல தொழிற்சாலைகளை மூடுவதற்கு இது ஊக்கமளிக்கும்; ஆகவே, இப்பிரச்சினையில் சர்க்கார் தலையிட்டு ஆவன செய்யவேண்டும்; இந்திய உயர் நீதிமன்றமோ அல்லது வேறெந்த நீதிமன்றமோ, சட்டத்திற்கு விளக்கம் தரவேண்டுமே தவிர, மக்களுடைய உரிமையில் தலையிடக்கூடாது," என்றெல்லாம் சங்கத் தலைவர் எஸ் ஆர். வாசவதா கூறியுள்ளதாகச் செய்தி ஒன்றில் காணப்படுகிறது.

கிராமத் தொழில் பயிற்சிக் கல்லூரி

20 இலட்சம் ரூபாய் செலவில் அரக்கோணத்தில் அமையுமாம்

சென்னை, டிச. 17—

அரக்கோணத்திற்கு அருகிலுள்ள இராணுவ முகாமில், ரூ. 20 இலட்சம் செலவில், கிராமக் கைத்தொழில் பயிற்சிக் கல்லூரியை ஆரம்பிப்பதற்குச் சென்னை சர்க்கார் அனுமதியளித்திருக்கிறது.

தமிழ் நாட்டில் கிராமத் தொழில்களை அமுல் நடத்தும் துறையில், 200 பேர்களுக்கு இங்கு பயிற்சியளிக்கப்படும்.

இந்தியாவிலேயே முதலாவதாக ஒரு மாநில சர்க்கார் நடத்தும் இக் கல்லூரிக்கு டில்லிப் பேரசு மானியம் வழங்கக்கூடுமாம்.

கல்லுப்பட்டியிலுள்ள மற்றொரு நிலையமான 'சாந்தி நிகேதனி'ல் ஆண்டிற்கு 100 பேருக்கு இத் துறையில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

மறுப்பு

"23—11—56 'தினமணி' இதழில், 'தி. மு. க.-விற்கு முழுக்கு' என்ற தலைப்பில் வெளியான செய்தி தவறாகும். அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தோழர் பி ஏ. ஜானகிராம நாயுடு என்பவர், நமது கழகத்தில் உறுப்பினராகவோ, அனுதாபியாகவோ இருந்தது கிடையாது. இது காங்கிரஸ்காரர்கள் மேற்கொண்டுள்ள பிற்போக்குத்தனமான பொய்ப் பிரச்சாரமாகும்"

என்று, செங்கம் தி. மு. கழகத் துணைச்செயலாளர் து. கண்ணன் அறிவிக்கிருர்.

பிரிவுபசாரக் கூட்டம்

சென்னை, டிச. 13—

சென்னை மாநில மராமத்து இலாகா பணிமனையில் (பி.டபிள்யூ. ஒர்க் ஷாப், ஸ்டோர்ஸ்) பணியாற்றிவந்த தொழிலக நல அதிகாரி திரு. ஏ. நமசிவாயம் அவர்கள் உத்தியோகபூர்வமாகக் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மாற்றப்பட்டதையொட்டி நேற்று மாலை இங்கு, தொழிற்சாலை ஜெனரல் சூப்பரின்டென்டென்ட் திரு. என். பி. இராம் தலைமையில் பிரிவுபசாரக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

கூட்டத்தில் கலந்துகொண்டோர் அனைவரும் அடங்கிய நிழற்படம் எடுக்கப்பட்டதுடன், தேநீர் விருந்தொன்றும் நடைபெற்றது. பல பிரமுகர்கள், திரு. நமசிவாயம் அவர்கள் தொழிலாளர்களுக்கும் தொழிற்சாலைகளுக்கும் செய்த சேவைகளைப் பாராட்டிப் பேசினர். அவருக்குப் பிரிவுபசாரப் பத்திரம் ஒன்றும் வாசித்தளிக்கப்பட்டது.

(ந. தி.)

நன்றியறிவிப்பு

2-12-56 முதல் 8-12-56 முடிய திருச்சி மாவட்டத்தில் நானொன்றுக்கு 2, 3 கூட்டங்களுக்கு அதிகமாகக் கலந்துகொண்டு, தனது உடல்நலக் குறைவையும் கருதாது தனது சுற்றுப்பயண நிகழ்ச்சியை சிறப்பான முறையிலும் வெற்றிகரமாகவும் நடத்தித்தந்த தோழர் மு. கருணநிதி அவர்களுக்கும், கழகக் கூட்டங்களை சிறப்பான முறையில் ஏற்பாடு செய்துதந்த கழகத் தோழர்களுக்கும், மற்றும் அனைவருக்கும், தேர்தல் நிதி அளித்த அனைவருக்கும் திருச்சி மாவட்டத் தி. மு. கழகச் சார்பில் மாவட்டச் செயலாளர் அன்பில்-தருமலிங்கம் நன்றி தெரிவித்துக் கொள்கிருர்.

பிறப்பு

சென்னை 3-வது வட்ட தி. மு. கழக மாவட்டப் பிரதிநிதி தோழர் வி கே. பி. சாமி அவர்களது துணைவியார் ஓர் ஆண் மகவுக்குத் தாயானுர். இதன் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பு தரப்பட்டது. வரப் பெற்றேம் — நன்றி — பொறுப்பாளர்.

வட ஆற்காடு மாவட்டத்தில் தேர்தல் நிதி நாடகங்கள்

அண்ணா, கழக முன்னணித் தோழர்கள் பங்கேற்று நடித்தனர்

சிறப்புக் கூட்டத்தின் மூலமும் நிதி திரட்டினர்

கிளைக் கழகங்களின் சீரிய முயற்சி

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுத் தேர்தல் நிதியைத் திரட்ட, அண்ணா அவர்களின் கருத்தோவியமான 'சந்திரோதயம்' நாடகத்தை, வட ஆற்காடு மாவட்டத்தில் மூன்று இடங்களில் நடத்தத் தலைமைக் கழகம் முடிவு செய்ததற்கேற்ப, டிச. 14-ல், திருவண்ணாமலையிலும் 15-ல் குடியேற்றத்திலும் 16-ல் திருப்பத்தூரிலும் சிறப்புற நடந்தேறின.

இந்நாடக ஏற்பாட்டினை அந்தந்தக் கிளைக் கழகங்களும் பொதுக் குழு உறுப்பினர்களும் உடனிருந்து இனிது நிறைவேற்றித் தந்தனர்.

இந்நாடகத்தில் அண்ணா அவர்களும், தோழர்கள் கே ஏ மதியழகன், என். வி நடராசன், சி. வி. எம். அண்ணாமலை, சி வி. இராசகோபால், போளூர்–சுப்பிரமணியம், கே எம். கண்ணபிரான், எஸ். எஸ். பி. லிங்கம், காஞ்சி–பாபு, செந்தாமரை, புகழேந்தி, பாலமுருகன், மாணவத் தோழர் பார்த்தசாரதி, கே. ஆர். ஆர். குழுவைச் சேர்ந்த கருணாகரன், மணி, தோழியர் காந்தா, சிறுமி பானுமதி ஆகியோர் நடித்தனர்.

'மேக்கப்' பணியை தோழர் சுந்தரேசன் குழுவினரும், ஆடை அலங்காரப் பணியை கே. ஆர். ஆர். குழுவைச் சேர்ந்த தோழர் சண்முகமும், நடிகர் குழுவின் மேற்பார்வையை காஞ்சி தோழர் வேணுவும், காஞ்சி-சீனுவாசன் குழுவினர் பக்கவாத்தியப் பணியையும் மேற்கொண்டு சிறப்பித்தனர்.

இம்மூன்று நாடகங்களிலும் (செலவு போக) ரூ. 3,342 தேர்தல் நிதிக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

திருவண்ணாமலையில் தி மு கழகக் கிளையினரும், செயலாளர் வா. குமாரசாமியும், பொதுக் குழு உறுப்பினர் ப. உ. சண்முகம் அவர்களும் மற்ற தோழர்களும் தீவிர முயற்சியெடுத்துத் தங்களின் கடமையை நிறைவு பெறச் செய்தனர்.

நாடக முடிவில் அண்ணா அவர்கள், தலைமைக் கழகச் சார்பில் நகர தி. மு கழகக் கிளையினருக்கும் ஆதரவுதந்த பொதுமக்களுக்கும் நன்றி தெரிவித்ததோடு, நாடகத்தில் பங்கேற்று நடித்த தோழர்களையும் பாராட்டிப் பேசினார்கள்.

நகரக் கிளையின் சார்பிலும் மற்றும் பல கிளைகள், சார்புக் கழகங்கள் சார்பிலும் கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன.

குடியேற்றத்தில் நகரக் கிளையினரும், செயலாளர் பொன்னுசாமி, சார்புக் கழகத் தோழர்கள் ஆகியோரும் முன்னின்று ஆவன செய்தனர்.

தேர்தல் நிதிக்குத் தங்களால் முடிந்த அளவு பணம் திரட்டித் தந்தனர்.

நாடக முடிவில் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன், நகர கிளைக் கழகத்தினருக்கும், நடிகத் தோழர்களுக்கும் தலைமைக் கழகச் சார்பில் நன்றி தெரிவித்துப் பேசினார்.

கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன.

திருப்பத்தூரில் நகரக் கிளையினரும், செயலாளர் பாலு, பொதுக் குழு உறுப்பினர் நெடுஞ்செழியன், டாக்டர் கிருஷ்ணன், ஏ. சி. னர், தனராமன், வழக்கறிஞர் சாமி (நாயுடு), வெங்கடாசலம் உள்ளிட்ட அனைவரும் இந்நாடகப் பணியைக் கவனித்தனர்.

நாடக வசூல் மூலம் கிடைத்த தொகையை தேர்தல் நிதிக்கு அளித்தனர்.

இத்நிதியைப் பெற்றுக்கொண்டு துணைப் பொதுச்செயலாளர் என் வி. நடராசன் அவர்கள் கிளைக் கழகத்தினருக்கும் ஏனையோருக்கும் தலைமைக் கழகச் சார்பில் நன்றி அறிவித்துப் பேசினார்.

இறுதியாக மாவட்டச் செயலாளர் தோழர் முல்லைசத்தி, அண்ணா அவர்களுக்கும், மற்றும் அனைவருக்கும் மாவட்டக் கழகச் சார்பில் நன்றி தெரிவித்தார்.

விருந்துபசாரங்கள்

15—12—56 அன்று திருவண்ணாமலையில் தோழர் ப. உ சண்முகம் அவர்கள் இல்லத்தில் அண்ணா தோழர்கள் என். வி நடராசன், கே. ஏ. மதியழகன், சி வி இராசகோபால், எஸ் எஸ். பி. லிங்கம், காஞ்சீபுரம் பாபு, போளூர் சுப்பிரமணியம் ஆகியோருக்கு விருந்துபசாரம் நடைபெற்றது.

தோழர் ப. உ. ச. அவர்களும் அவரது இளவல்களான தியாகராசன், கண்ணன் ஆகியோரும், மற்றும் கழகத் தோழர்களும் உடனிருந்து உபசரித்தனர்.

16—12—56 காலை வேலூரில் தோழர் சங்கர் அவர்கள் தமது இல்லத்தில் சிற்றுண்டி விருந்து அளித்தார்.

பகல் முல்லைக்கொம்மையில் தோழர் எம். பி. வடிவேல் அவர்கள் தமது இல்லத்தில் அண்ணா அவர்களுக்கும் மற்றத் தோழர்களுக்கும் விருந்துபசாரம் நடத்தினர்; அவரது இளவல்கள் முல்லை சத்தி, கிட்டு, மற்றும் கழகத் தோழர்கள் உடனிருந்து ஆவன செய்தனர்.

அன்று இரவு திருப்பத்தூரில் தோழர் வெங்கடாசலம் அவர்கள் இல்லத்தில் அண்ணா அவர்களுக்கும், குழுவினருக்கும் விருந்துபசாரம் நடத்தப்பட்டது.

ஐந்தாண்டுத் திட்டத்தின் நிலைமை இதுதானா?

புதுடில்லி, டிச. 17—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் பல்வேறு மாநிலங்களிலும் போடப்பட்டுள்ள திட்டங்களில் கால் பங்கை (அதாவது 25 சதவிகிதம்) குறைத்துவிடுமாறு திட்டக் கமிஷன் சிபாரிசு செய்துள்ளதாம்.

கழகக் கூட்டங்கள்

★

வெண்ணுங்குப்பட்டு:

20—12—56 மாலை 6 மணிக்கு

தலைவர்: தி. ந. சம்பந்தம்

பேசுவோர்:

சி. வி. எம். அண்ணாமலை

முகவை-ஆர். எஸ். பாண்டியன்

டி. வி. நாராயணசாமி

★

கண்ணதம்பேட்டை:

மாரியம்மன் கோயிலுக்கு எதிரில்

19—11—56 மாலை 5½ மணிக்கு

தி. மு கழகத் துவக்க விழா

தலைவர்: என். அருணாசலம்

பேசுவோர்:

கி மனோகரன்

ப. நாராயணசாமி

கோ. சிவஞானம்

★

மன்னார்குடி:

தேரடியில்

20-12-56 மாலை 6-30 மணிக்கு

பேசுவோர்:

கி. மனோகரன்

ப. நாராயணசாமி

இடைக்கால வரவு-செலவுத் திட்டம்: சென்னை சட்டசபையில் தாக்கல்

செலவு-வருமானத்தை அடுத்துவரும் சர்க்கார் கவனித்துக் கொள்ளுமாம்

1957 — 58ம் ஆண்டுக்கான இடைக்கால வரவு - செலவுத் திட்டம் ஒன்றை சென்னை சட்டசபையில் நிதிமந்திரி தாக்கல் செய்திருக்கிறார்.

புது வரி விதிப்பு எதும் இல்லாத அந்தத் திட்டம், இப்போதுள்ள வரிவிதிப்பின்படி, ரூ - 52 65 கோடி வருமானமும், ரூ - 57 71 கோடி செலவினங்களும் கொண்டதாக அமைந்திருக்கிறது

துண்டு விழும் தொகை ரூ. 5·06 கோடியாகிறது.

மேலும், செலவு, வருமானம் இவைபற்றி அடுத்துவரும் சர்க்கார் கவனித்துக் கொள்ளுமாம்.

சர்க்கார் ஊழியருக்கு சில சலுகைகள் தருவதற்காக ரூ. 2 கோடியும், மின்சாரத் திட்டங்களுக்கு ரூ. 16 கோடி உட்பட பல்வேறு திட்டங்களுக்காக ரூ 25·64 கோடியும் செலவிடப்படும் என்றும் திட்டம் கூறுகிறது.

கிராம அதிகாரிகளுக்கும், தலையாரி போன்ற கிராம ஊழியர்களுக்கும், இதர சர்க்கார் ஊழியர்களுக்குத் தரப்படுகிற கல்வி, மருத்துவ வசதிகள் தரப்படும் என்றும், பிரயாணப்படி இதர ஊழியர்களுக்குக் கிடைப்பதுபோலவே தரப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தரப்படும் கல்விச் சலுகைகள், மதம் மாறிய தாழ்த்தப்பட்டவர்களுக்கும் தரப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

தமிழில்

முதன்முதலாக சென்னை சட்டசபையில், வரவு — செலவுத் திட்டத்தைத் தாக்கல் செய்த மந்திரி சி. சுப்பிரமணியம் தமிழில் பேசியிருக்கிறார்.

முதல் நான்கு மாதங்கட்கு

திட்டம் குறித்துப் பேசுகையில் மந்திரி சி. சுப்பிரமணியம், இது வரப்போகும் ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் எதிர்பார்க்கப்படும் செலவினங்களுக்காக மட்டுமே தயாரிக்கப்பட்டிருக்கிறது என்றாலும், இப்போதுள்ள நிலைமைகளையும், வரப்போகும் ஆண்டின் நிதி நிலைமையும் அறிந்துகொள்ள இது உதவுவதாகும் என்றும் புதிய சர்க்கார் இந்தத் திட்டத்தை மீண்டும் பரிசீலித்துப் புதிய சட்டசபையில் தாக்கல் செய்வர் என்றும் கூறியிருக்கிறார்.

வேலூரில் சிறப்புக் கூட்டம்

அண்ணா, நடராசன் கலந்துகொண்டனர்

தேர்தல் நிதிக்கு ரூ. 1,041-8-0 அளித்தனர்

வேலூர் நகர தி. மு. கழகச் சார்பில் தேர்தல் நிதி சிறப்புக் கூட்டம் 16—12—56 காலை 10 மணிக்கு நேஷனல் டாக்கீசில் தோழர் ம. பா. சாரதி எம். சி. தலைமையில் நடைபெற்றது. ஏராளமான தோழர்களும் தாய்மார்களும் திரண்டிருந்தனர்.

அண்ணா அவர்களும் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்களும் சொற்பொழிவாற்றினர்.

நகரக் கிளை, மற்றும் சார்புக் கழகங்கள் சார்பில் கைத்தறி ஆடைகளும் மலர்மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

தேர்தல் நிதிக்கு, வேலூர் நகரக் கிளையின் சார்பில் தோழர் மா. பா. சாரதி ரூ. 1,001 அண்ணாவிடம் அளித்தார்.

மற்றும் தோட்டப்பாளையம் தி.மு. கழகம் ரூ.25; தோழர் ஆறுமுகம் ரூ. 6-8-0; இரு குழந்தைகளுக்குப் பெயர் சூட்டியதையொட்டி ரூ. 2; கைத்தறி ஆடை ஏலம் விட்ட வகையில் ரூ. 7 அளிக்கப்பட்டன.

ஆந்திர தொழிலமைச்சரிடம் நள்ளிரவில் முறையீடு!

சினிமா தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்

ஐதராபாத், டிச. 17—

சுமார் 300 சினிமா தொழிலாளர்கள், ஓட்டல் தொழிலாளர்கள் சேர்ந்து இரவு சினிமா காட்சி முடிந்த பிறகு நள்ளிரவில், ஆந்திரப் பிரதேசத் தொழிலாளா மந்திரியின் வீட்டிற்குச் சென்று, அந்த நடுநிசியில் கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் செய்திருக்கின்றனர்.

நன்றாகத் தூங்கிக்கொண்டிருந்த மந்திரி, திடுக்கிட்டு ஏதோ பெரிய ஆபத்து நிகழ்ந்துவிட்டதாகக் கருதிப் பயந்துபோய், ஆர்ப்பாட்டக்காரர்களிடம் வந்தாராம்!

மன்னிக்குமாறு கேட்டுக்கொண்டே தொழிலாளர்கள் தாங்கள் அப்போதுதான் வரமுடிந்தது என்றும் தங்களின் குறைகள் இன்னின்ன என்றும் எடுத்துரைத்தனராம்.

மந்திரியும், தொழிலாளர்கள் கூறிய அனைத்தையும் பொறுமையோடு கேட்டுக்கொண்டிருந்துவிட்டு, படுக்கச் சென்றாராம்!

அறியாமையின் எதிரொலி!

12-பேர் பலியின் பரிதாபம்

சிட்னி, டிச. 17—

சில வாரங்களுக்கு முன்பு நியூகினியில் துவக்கப்பட்ட சுதேசிகளின் கிளர்ச்சி இன்னும் நீடித்து வருகிறதாம்.

12 பேர் கொல்லப்பட்டதாகவும், கிறிஸ்தவ மடாலயங்கள் உட்பட பள்ளிகள் சேதப்படுத்தப்பட்டதாகவும், பல விமானக் கொட்டகைகள் நாசப்படுத்தப்பட்டதாகவும்செய்திகள் கூறுகின்றன

சுதேசி வளர்க்கும் பன்றிகள் நோயால் மாண்டதும், அந்த நோய்க்குக் காரணம் ஐரோப்பியர்தான் என்றும் சுதேசிகள் நினைப்பதுதான் இந்தக் கிளர்ச்சிக்குக் காரணமாம்!

தேர்தல் பிரச்சாரத்திற்கு...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

போகிறீர்கள்?' என்று படேலைக் கேட்டாராம்,

படேல், 'சினிமா மூலம் பல்லாயிரக்கணக்கான கல்வியறிவற்ற மக்களுக்கு பல விஷயங்களைச் சொல்ல முடியும்; அதனால், சினிமா மூலம் தேர்தல் பிரச்சாரம் செய்யப்போகிறேன்,' என்றாராம்!

உடனே பண்டிதர், 'உண்மையில் அந்த மக்களில் சிலருக்கு, நமது மந்திரிகளுக்குத் தெரிவதைவிட அதிகமாகத் தெரியும்,' என்று கூறினாராம்!

அமைச்சர்களுக்கு நிரந்தர விழா?

புதுடில்லி, டிச 17—

டில்லியிலுள்ள அமைச்சர்களின் வீடுகளில் நிரந்தரமாக நாளதோறும் 'தீபாவளி' நடந்துவருவதாகத் தோன்றுகிறது,' என்று மக்கள் சபையில் எச். வி. காமத் குறிப்பிட்டுள்ளார்.

உள்நாட்டு இலாகாவின் உபமானியக் கோரிக்கைமீது பேசிய அவர், டில்லியில் அமைச்சர் வீடுகளின் மின்சாரப் பட்டியல் மாதம் ரூ 1 000-த்திற்குமேல் ஆவதாகவும், இத்தொகை பொதுப் பணத்திலிருந்து தரப்படுவதாகவும் கூறினாராம்.

உள்நாட்டு இலாகா அமைச்சர் தத்தார் பதிலளிக்கையில் இது பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லையாம்!

சொற்பயிற்சிக் கூட்டம்

19—12—56 மாலை 7 மணிக்கு சென்னை சூளை ஊ பு அ, சவுந்திரபாண்டியனார் நினைவுப் படிப்பகத்தில் தோழர் பூ தெய்வநாயகம் தலைமையில் தோழர்கள் பலர் 'திராவிட நாடு ஏன் தேவை' என்ற தலைப்பில் பேசுவர்.

தமிழ் இலக்கிய வாரம்

20—12—56 மாலை 5 மணிக்கு பெங்களூர் நடுநிலைக் கல்லூரி பல்கலைக் கழகத் தமிழ்ச் சங்கச் சார்பில் இடைநிலைக் கல்லூரி சொற்பொழிவு மண்டபத்தில் திருமதி டி. கே. நாகாம்பாள் தலைமையில் தமிழ் இலக்கிய வாரவிழாவின் இரண்டாவது நாள் நிகழ்ச்சி நடைபெறும். தோழர் ஐ. சந்தர், தோழியர் பி. இராஜாம்பாள், எஸ் கே. ஜெகதீஸ்வரி ஆகியோர் பல தலைப்புகளில் பேசுவர்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

சிம்சன் & குருப் கம்பெனித் தொழிலாளர்கள் சார்பில்

தி. மு. கழகத் தேர்தல் நிதி அளிப்புக் கூட்டம்

20—12—56 வியாழன் மாலை 6-மணிக்கு

நேப்பியர் பூங்காவில் (சிந்தாதிரிப்பேட்டை)

★

தலைவர்: **வி. எஸ். கோவிந்தராசன்**

பேசுவோர்:

அண்ணா, என். வி. நடராசன்,

எம். ஏ. கரிகாலன்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.